# கடப்புநிலை உளவியலின் தற்காலப் போக்கு (வடமாகாணத்தை அடிப்படையாக கொண்ட கலப்புமுறை ஆய்வு)

திரு.அ.அருண்[1], திருமதி.இராஜ்குமார்[2]

**ஆய்வுச்சுருக்கம்:** மனித நடத்தைகளை விஞ்ஞானரீதியாக ஆராய்கின்ற கற்கையான உளவியலின் பிரிவுகளில் ஒன்றாக கடப்புநிலை உளவியலானது காணப்படுகின்றது. கடப்புநிலை உளவியல் மனிதனுடைய மனதின் அளப்பரிய சக்திகள், மனிதனுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள், ஆவி, ஆன்மா குறித்த விடயங்கள் போன்றவற்றை விஞ்ஞானரீதியாக ஆராய்கின்றது. "கடப்புநிலை உளவியலானது உயிர்களுக்கு இடையேயான தொடர்பு மற்றும் இயற்கையின் அறியப்பட்ட இயற்பியல் சட்டங்களை மிஞ்சுகின்றதுபோல் தோன்றும் அவற்றினுடைய வெளிப்புறச் சூழல் ஆகியவற்றிற்கிடையேயான பரஸ்பர தொடர்பு பற்றிய விஞ்ஞானரீதியான கற்கை ஆகும்" (Parapsychology is the scientific study of interactions between living organisms and their external environment that seem to transcend the known physical laws of nature) என வரையறை செய்யப்படுகின்றது. இத்தகைய கடப்புநிலை உளவியலில் பல்வேறு விடயங்கள் மிக நீண்டகாலமாக உலகெங்கும் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஞானதிருஸ்டி (Clairvoyance), தொலை நுண்ணுணர்வு (Telepathy), தொலைவில் கேட்டல் (Clairaudience), முன்னுணர்தல் (Precognition) மறுபிறப்பு, போன்ற பல்வேறு விடயங்கள் கடப்புநிலை உளவியலில் ஆராயப்படுகின்றன. அவ்வகையில் இவ்வாய்வானது கடப்புநிலை உளவியலின் அம்சங்கள் இலங்கையின் வடமாகாணத்தில் எத்தகைய வளர்ச்சிப் போக்கினையும், உண்மைத் தன்மையையும் கொண்டுள்ளன என்பதை கண்டறியும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் புலன்கடந்த புலக்காட்சி (ESP) மையப்படுத்தப்படுவதுடன் இவ்வாய்வானது பிரதான முறையியலாக பரிசோதனை முறையினையும் ஏனைய ஆய்வு முறைகளான அவதான முறை மற்றும் நேர்காணல் முறை என்பவற்றையும் தரவு சேகரிப்பதற்கென கொண்டுள்ளது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 200 மாதிரிகள் எழுமாற்று அடிப்படையில் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். பண்பியல் மற்றும் அளவியல் முறைகளின் கலப்பு முறை ஆய்வாக இவ்வாய்வு அமைந்திருப்பதுடன் அளவியல்சார் அம்சங்களை பகுப்பாய்வு செய்வதற்கென SPSS தரவுப் பகுப்பாய்வு செயலியானது பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பரிசோதனைமுறை, அவதானமுறை, கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்பவற்றின் ஊடாக பெறப்பட்ட தரவுகள் பண்பியல் மற்றும் அளவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு முடிவானது பெறப்பட்டது. இதன்படி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகளின்படி 6 வீதம் தொலை நுண்ணுணர்விற்கான (Telepathy) சாதகமான நிலைகளும் 3.4 வீதம் தொலைவில் பார்த்தல், ஞானதிருஸ்டி, முக்காலம் உணர்தல் போன்றவற்றிற்கான சாதகமான முடிவுகளும் கண்டறியப்பட்டன. நேர்காணல் ஊடாக

பெறப்பட்ட தரவுகளின்படி 94 வீதமானவர்கள் அமானுஸ்யங்களை நம்புவதும், 36 வீதமானவர்கள் அமானுஸ்யங்களுடன் தொடர்புடைய அனுபவங்களை கொண்டிருப்பதும் கண்டறியப்பட்டது. மேலும் தொலைவில் கேட்டல், முக்காலத்தையும் உணர்தல், உளத்தால் இயக்கல், நோய்களை குணமாக்கும் ஆற்றல், மனக்கண் தொலைக்காட்சி, வசிய சக்தி, பொருட்களை தொடுவதன்மூலம் அவற்றின் வரலாற்றை அறிதல், செய்வினை செய்யும் ஆற்றல் கொண்டோர், ஆகிய கடப்புநிலை உளவியலின் அம்சங்கள் வடமாகாணத்தில் 00 வீதமாக காணப்பட்டமையும் நேர்காணலின் தரவுகள் ஊடாக கண்டறியப்பட்டன. அமானுஸ்யங்கள் தொடர்பாக வடமாகாணத்தில் குறித்த காலத்தினுள் சேகரிக்கப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள், வாக்குமூலங்கள் மற்றும் அவதானங்கள் என்பவை விஞ்ஞானரீதியாக நிரூபிப்பதற்கு போதுமான ஆதாரங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதும் ஆய்வு முடிவுகளாகப் பெறப்பட்டன.

**திறவுச்சொற்கள்** - உளவியல், கடப்புநிலை, அமானுஸ்யங்கள், புலன்கடந்த புலக்காட்சி,

**அறிமுகம்**

உளவியல் என்பது தற்காலத்தில் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் ஓர் துறையாகும். அதிகரித்துவரும் உளநலம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவற்றினைக் கையாளுவதற்காக எழுந்துள்ள தேவை என்பவற்றை முன்னிட்டு உளவியலினுடைய வளர்ச்சிப்போக்கும் அதிகரித்துள்ளது. ''உளவியல் அல்லது மனோதத்துவம் என்பது மனதின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வுசெய்யும் கற்கைநெறி மற்றும் பயன்பாட்டு ஒழுங்குமுறையாகும்[4]'' எனக் குறிப்பிடப்படுகின்றது. ''கடப்புநிலை உளவியலானது உயிர்களுக்கு இடையேயான தொடர்பு மற்றும் இயற்கையின் அறியப்பட்ட இயற்பியல் சட்டங்களை மிஞ்சுகின்றதுபோல் தோன்றும் அவற்றினுடைய வெளிப்புறச் சூழல் ஆகியவற்றிற்கிடையேயான பரஸ்பர தொடர்பு பற்றிய விஞ்ஞானரீதியான கற்கை ஆகும்'' (Parapsychology is the scientific study of interactions between living organisms and their external environment that seem to transcend the known physical laws of nature[5]).

இதன்படி பார்க்கின்றபோது கடப்புநிலை உளவியல் என்பது அன்றாடம் நிகழும் வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகள் மற்றும் மனிதனுக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயும் உளவியலின் ஓர் விஞ்ஞானரீதியான ஆய்வுப்புலம் எனக் குறிப்பிடலாம். உதாரணமாகக் குறிப்பிடுவதானால் இவற்றுள் தொலைவில் உணர்தல், முற்கூட்டியே அறிதல், ஞான திருஸ்டி, உளத்தால் இயக்குதல், மர்ம வீடுகள், மறுபிறப்பு, ஆவிகளுடன் உரையாடுதல், தொலைவில் கேட்டல், எண்ணங்கள் ஊடாக உரையாடுதல், இறப்புடன் நெருங்கிய அனுபவங்கள், போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக கடப்புநிலை உளவியலானது ஆய்வு செய்கின்றது. இது தொடர்பான

[4] Wikipedia, 2017, "உளவியல்", 29.06.2018, https://ta.wikipedia.org/wiki/உளவியல்.
[5] Rhine Research Center, 2018, "What is parapsychology?", 29.06.2018, https://www.rhine.org/what-we-do/parapsychology/what-is-parapsychology.html.

ஆய்வுகள் மிக நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. மேற்குலக நாடுகளைக் காட்டிலும் கீழைத்தேச நாடுகளில் இவை தொடர்பான நம்பிக்கைகள் மிக அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்க முடியும். இருப்பினும் ஆரம்ப காலங்களினை விட தற்காலத்தில் கடப்புநிலை உளவியல் தொடர்பான ஆய்வுகள் அதிகம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் ஏனைய உளவியல் புலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைக் காட்டிலும் மிகக் குறைவெனினும் ஆய்வு முடிவுகள் பல்வேறுபட்ட கடப்பு நிலை அம்சங்கள், ESP என்பவற்றை நிரூபிப்பதாக அமைந்துள்ளன. பலர் கடப்புநிலை அம்சங்களுடன் தொடர்புபட்ட அனுபவங்களினைக் கொண்டிருக்கின்றனர் என்பதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. Para என்ற சொல்லானது கிரேக்கத்தை மூலமாக கொண்டது. அதன் பொருள் ''மிக அருகில்'' என்பதாகும். இதனைவிட மிக நெருக்கமாக ''அப்பால்'' என்ற பொருளையும் தருகின்றது. "Parapsychology" என்ற பதமானது 1889 இல் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் தத்துவவியலாளரான Max Dessoir என்பவரால் பயன்படுத்தப்பட்டது. இது 1930 களில் J. B. Rhine என்பவரால் உள்வாங்கிக்கொள்ளப்பட்டு பரிசோதனை முறைமை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விமுறைமை என்பவற்றில் "psychical research" என்ற சொல்லிற்கு மாற்றீடாக பயன்படுத்தப்பட்டது. Para என்ற சொல் கிரேக்கர் காலத்திலேயே சிறப்பாக உருவாகியதாகும். இது ''இணைந்து'' (alongside) என்ற பொருளையும் குறிக்கின்றது. கடப்புநிலை உளவியலில் "psi" என்பது பௌதீக அல்லது உயிரியல் முறைமைகளால் விளக்கப்படாத extrasensory perception மற்றும் உள இயக்கவியல் (psychokinesis) அனுபவங்களில் அறியப்படாத காரணியாகும். இந்த "psi" என்பது கிரேக்கத்தில் இருந்து பெறப்பட்டதாகும். இது கிரேக்க அரிச்சுவடியில் 23வது எழுத்தாக காணப்படுகின்றது. மேலும் கிரேக்க சொல்லான psyche என்பதன் முதலெழுத்து ''மனம்'' அல்லது ''ஆன்மா'' என்பதனைக் குறிக்கின்றது. இச்சொல்லானது உயிரியலாளரான Berthold P. Wiesner என்பவரால் உருவாக்கப்பட்டதுடன் முதன்முதலாக உளவியலாளரான Robert Thouless என்பவரால் 1942ல் "British Journal of Psychology" என்பதில் பிரசுரிக்கப்பட்டது. The Parapsychological Association "Psi" என்பதனை இரு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. "psi-gamma" என்பது extrasensory perception (ESP) என்பதற்காகவும், "psi-kappa" என்பதனை உள இயக்கவியலுக்காகவும் (psychokinesis) வகைப்படுத்தியுள்ளது. இவ்வாறு பிரபலமான கலாச்சாரத்தில் "Psi" என்பது மேலும் மேலும் மனதின் சிறப்பான சக்திகள், மனம்சார்ந்த அம்சங்கள், அப்பாற்பட்ட சக்திகள், திறன்கள் மற்றும் சக்திகள் என்பவற்றுடன் ஒரே பொருளுடையதாக மாறிவிட்டது.

கடப்புநிலை உளவியலானது பல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. Apportation (ஒரு பொருள், அதன் உள்ளடக்கம் தொடர்பாக அனுபவத்தில் அறியக்கூடிய ஆற்றல் அல்லது மறைக்கப்பட்ட பொருட்களை அறியும் ஆற்றல்), Aura reading (சுற்றியுள்ள பொருட்கள், நபர்கள், தொடர்பான சக்தியினை முன்னறியக்கூடிய ஆற்றல், The ability to perceive "energy fields" surrounding people, places and things), Automatic writing (சிந்தனை உணர்வற்ற நிலையில் எழுதக்கூடிய ஆற்றல், The ability to write without conscious thought), Claircognizance (யாராலும் குறிப்பிடப்படாது அல்லாது கற்கப்படாது அறிவினைப் பெறுதல்), Clairgustance (எவ்வித தொடர்புமில்லாமல் ஓர் பொருள்பற்றி அறியும் ஆற்றல், The ability to perceive an ethereal substance without contact.), Clairolfactance (வாசனையூடாக ஆன்மீக அல்லது ஆவியுலக அறிவு தொடர்பாக அறியக்கூடிய ஆற்றல், The ability to access spiritual or mediumistic knowledge through smell), Clairsentience (உணர்வுகளினால் மனதில் உள்ளவற்றினை அறியும் திறன், The ability to acquire psychic knowledge by feeling.), Conjuration (மெல்லிய காற்றிலிருந்து பொருட்களை வரவழைக்கும் திறன், The ability to summon items from thin air), Divination, Dowsing (தண்ணீரைக் கண்டறிவதற்கான திறன்), Energy manipulation (உடலியல் அல்லது உடலியல் அல்லாத வகையில் ஒருவரின் ஆற்றலைப் பயன்படுத்துதல்), Energy medicine (ஒருவர் தன்னுடைய ஆற்றலினைப் பயன்படுத்திக் குணமாக்குதலினை மேற்கொள்ளல்), Hydrokinesis (தண்ணீரைக் கையாள்வதற்கான ஆற்றல்), Levitation (உடலினை உயர்த்தும் அல்லது காற்றில் மிதக்கும் ஆற்றல்), Mediumship (ஆவிகளுடன் தொடர்புபடுதல்), Psychic surgery (உளச்சக்தியினால் திசுக்களினைக் குணப்படுத்தல்), Psychometry (ஒரு பொருளை அல்லது நபரை தொடுவதன்மூலம் அவர் அல்லது அது தொடர்பான தகவல்களினைப் பெற்றுக்கொள்ளல்), Pyrokinesis (மனதைக் கையாளக்கூடிய ஆற்றல், The ability to manipulate fire with your mind), Remote viewing (தொலைவில் உள்ளவற்றை அல்லது தூரங்களை காணும் ஆற்றல்) Retrocognition (நடந்தவற்றை அறியும் ஆற்றல்), Thoughtography (ஒருவருடைய மனதில் உள்ளவற்றினை புகைப்படத்தை எரிப்பதுபோன்று அழிக்கும் ஆற்றல்) போன்ற பல ஆற்றல்கள் தொடர்பான விடயங்களினை கடப்புநிலை உளவியலானது ஆராய்கின்றது. அவை வடமாகாணத்தில் தற்போது எத்தகைய நிலையில் காணப்படுகின்றன என்பதனைக் கண்டறிவதனை மையமாக கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இதுவரை கடப்புநிலை உளவியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் நோக்குகின்றபோது அவ்வாய்வுகள் அனைத்தும் ஓர் கலப்பு முறையினை (Mixed Methods) அடிப்படையாக கொண்டே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றமை

கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் இவ்வாய்வும் ஓர் கலப்பு முறைமையினை அடிப்படையாக கொண்டே மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தரவு சேகரிப்பானது பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. முதலாம் நிலைத் தரவுகள்

முதலாம் நிலைத் தரவுகளைச் சேகரிக்கவென பரிசோதனை முறை, தனியாள் ஆய்வு முறை, நேரடி மற்றும் மறைமுக அவதான முறைகள், கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், என்பவை பயன்படுத்தப்படுகின்றன.

- பரிசோதனை முறை

கடப்பு நிலை உளவியலில் உள்ளடங்கும் விடயங்களினை ஆராய்வதற்கு பரிசோதனை முறையானது இவ்வாய்வில் பிரதானப்படுத்தப்படுகின்றது. கடப்புநிலை உளவியல் உள்ளடக்கும் ESP தொடர்பான அம்சங்களை ஆராய்வதற்கு இது பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. ESP தொடர்பான அம்சங்களினைக் கண்டறிவதற்கு முன்னைய ஆய்வுகளில் zener cards test களே அதிகம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வகையில் இவ்வாய்வும் zener cards பரிசோதனைகளை ஒத்த, ஒருசில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. zener உயசனள பரிசோதனைகளை பொறுத்தவரை ஒரு வரிசையில் 5 அட்டைகள் என்ற அடிப்படையில் 25 அட்டைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ் அட்டைகள் 5 வேறுபட்ட சின்னங்களை கொண்டவையாக காணப்படுகின்றன.

இவற்றைக்கொண்டு ESP தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும் குறித்த இவ்வாய்வில் zener cards அட்டைகளில் ஒருசில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு பரிசோதனைகளானவை ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அதாவது zener cards இல் மேலதிகமாக 5 வடிவங்கள் சேர்க்கப்பட்டு மொத்தம் 10 வடிவங்களை கொண்ட அட்டைகள் இவ்வாய்விற்கென பயன்படுத்தப்படுகின்றன. ஞானதிருஸ்டி, தொலைவில் உணர்தல் அல்லது தொலைவில் பார்த்தல், Telepathy போன்றவற்றை கண்டறிவதற்கென இப்பரிசோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன.

02. இரண்டாம் நிலை தரவுகள்

இவ்வாய்விற்கான இரண்டாம் நிலை தரவுகள் பின்வரும் வகையில் பெறப்பட்டுள்ளன.

- முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையதள தரவுகள், வாராந்த, நாளாந்த பதிவேடுகள், அறிக்கைகள், குறிப்பேடுகள், பல்வேறுபட்ட குறிப்புக்கள்

ஆய்வுப் பிரதேசம்

- இவ்வாய்விற்கென இலங்கையின் வடமாகாணம் ஆய்வுப் பிரதேசமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் இவ்வாய்வுப்பிரதேசத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் நிகழும், நிகழ்ந்த கடப்புநிலை உளவியலில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான நிகழ்வுகள்

இவ்வாய்வின்போது கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அதுபோல இவ்வாய்விற்கான மாதிரிகளும் வடமாகாணத்தின் எல்லா மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாதிரிகளும் மாதிரித் தெரிவும்.

- இவ்வாய்விற்கென மாதிரிகளாக 200 (இருநூறு) மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இம்மாதிரிகள் எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு முறைமூலமாகவும், தெரிவுசெய்யப்பட்ட மாதிரியெடுப்பு (Specific Sampling) மூலமாகவும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஆய்வு நோக்கம்

- 01. பிரதான நோக்கம்
- இலங்கையின் வடமாகாணத்தினை அடிப்படையாக கொண்டு கடப்புநிலை உளவியலின் தற்கால வளர்ச்சியினை (போக்கினை) ஆராய்தல்

சிறப்பு நோக்கம்

- கடப்புநிலை உளவியல் அம்சங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துதல், வெளிப்படுத்துதல்

கருதுகோள்கள்

1. கடப்புநிலை உளவியல் அம்சங்கள் இலங்கையின் வடமாகாணத்தில் காணப்படுகின்றன
2. மக்கள் கடப்புநிலை அனுபவங்களைக் கொண்டிருக்கின்றனர்.
3. கடப்புநிலை உளவியலில் ஆராயப்படும் விடயங்கள் மனித நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**தரவுப்பகுப்பாய்வும் முடிவும்**

தரவுப்பகுப்பாய்வின் அடிப்படையில் எண்ணப்பரிமாற்றம் மற்றும் ஒத்துணர்தல் ஆகியவற்றை நோக்குகின்றபோது வெறும் 6 வீதமான அளவு சாதகமான முடிவுகளையே பெறக்கூடியதாக இருந்தமை பரிசோதனைகளின் ஊடாக கண்டறியப்பட்டது. இப்பரிசோதனைக்கான மாதிரிகள் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களில் இருந்தும் சம அளவு விகிதத்தில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எண்ணப்பரிமாற்றம் மற்றும் ஒத்துணர்தல் ஆகியவற்றைப் போலவே ஞானதிருஸ்டி மற்றும் முக்காலம் உணர்தல், தொலைவில் பார்த்தல் ஆகியவற்றைக் கண்டறிவதற்காக ESP தொடர்பான பரிசோதனைகள் Zinner Cards ஐப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. இப்பரிசோதனைக்கென யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 50 மாதிரிகள் குறிசொல்வோர்,

ஞானதிருஸ்டி கொண்டோர், என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்குமென சம அளவு விகிதத்தில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்

50 மாதிரிகளிடம் இருந்து பரிசோதனையூடாக பெறறப்பட்ட தரவுகளை கொண்டு ஞானதிருஸ்டி, தொலைவில் பார்த்தல், முக்காலம் உணர்தல் போன்றவற்றின் வீதத்தினைக் கண்டறிவதற்கு பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப்பட்டது.

பரிசோதனைகளில் பெறப்பட்ட மொத்த வீதங்கள் (Percentage)

மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை

170%

= 3.4%

50S


இதன்படி பார்க்கும்போது மேற்குறிப்பிட்ட ஞானதிருஸ்டி, தொலைவில் பார்த்தல், முக்காலம் உணர்தல் என்பவற்றிற்கான சாதகமான முடிவுகள் 3.4 வீதமானவையாகவே காணப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.


நேர்காணல் மூலமாக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்து நோக்குகின்றபோது நேர்காணப்பட்ட 100 மாதிரிகளில் 94 பேர் கடப்புநிலை உளவியலில் உள்ளடங்கும் அம்சங்கள், அமானுஸ்யங்கள், மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் என்பவற்றை நம்புவதாக குறிப்பிட்டுள்ளனர். இது நூற்று வீதத்தில் 94மூ ஆக காணப்படுகின்றது. அமானுஸ்ய சக்திகள் தொடர்பான அனுபவங்களை கொண்டுள்ளதாக 36 மாதிரிகள் குறிப்பிட்டுள்ளனர். இது நூற்று வீதத்தில் 36மூ ஆனதாக காணப்படுகின்றது. பேய் பூதம், ஆவிகளை கண்டதாக 9 பேரும், மரணத்துடன் நெருங்கிய அனுபவங்களைக் கொண்டவர்களாக 2 பேரும் நேர்காணலின்போது தெரிவித்தனர் இவை முறையே 9மூ, 2மூ ஆக காணப்படுகின்றது. ஆவிகள், பேய்கள் தொடர்பாக மாதிரிகள் கொண்டுள்ள அறிவு, நம்பிக்கைகள் என்பன 91 வீதமானவை பிறரிடம் இருந்தும் 9 வீதமானவை அவர்களுடைய சொந்த அனுபவங்களில் இருந்தும் பெறப்பட்டவையாக காணப்பட்டதாகவும் நேர்காணல் ஊடாக கண்டறியப்பட்டது. 6மூ மாதிரிகள் தம்மிடம் எண்ணப்பரிமாற்ற சக்தி காணப்பட்டதாக குறிப்பிட்டதை தொடர்ந்து அவர்கள் ESP தொடர்பான Zinner Cards பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அப்பரிசோதனைகளின்படி 6 வீதமான சாதகமான முடிவுகளையே எண்ணப்பரிமாற்றம் தொடர்பாக பெறக்கூடியதாக காணப்பட்டது.


தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளில் 7 மாதிரிகள் பிறருடைய எண்ணங்களை அறிந்துகொள்ள முடியும் எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். நூற்றுவீதத்தில் இது 7% ஆக காணப்படுகின்றது. இதனை நிரூபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 10% ஆனவை அவர்களுடைய ஆற்றல்களை நிரூபிப்பதாக அமைந்திருந்தன. 90 வீதமானவை அவர்களுடைய ஆற்றலை நிரூபிக்க போதுமானதாக அமையவில்லை என்பது பரிசோதனை முடிவுகளாக கிடைத்தன. 95% ஆனவர்கள் செய்வினை, பில்லிசூனியம், வசியம் என்பவற்றை நம்புவதாகவும் 16% ஆனவர்கள் அவற்றினால் தாம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டனர். தெரிவுசெய்யப்பட்ட 100 மாதிரிகளில் 60 மாதிரிகள் அதீத சக்திகள் கொண்ட நபர்கள் என்று தாம் கருதியவர்களுக்கு


(குறிசொல்வோர், மந்திரவாதிகள், காலம் கணிப்போர்) பணம் வழங்கியதாகவும் அந்த அறுபது மாதிரிகளில் 12 பேர் அவர்கள் (குறிசொல்வோர், மந்திரவாதிகள், காலம் கணிப்போர்) குறிப்பிட்டவை அப்படியே நடைபெற்றதாகவும் குறிப்பிட்டனர். 20 வீதமானவர்கள் (20 மாதிரிகள்) தம் கனவுகள் அவ்வாறே நடைபெற்றதாகவும் குறிப்பிட்டனர்.

ஆவிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஊடகங்களாக செயற்படுவோர், தொலைவில் கேட்கும் திறன் கொண்டோர், முக்காலத்தையும் கணிக்கும் ஆற்றல் கொண்டோர், தம் ஆற்றல்களை கொண்டு நோய்களை குணமாக்குவோர், உளத்தால் இயக்கும் ஆற்றல் கொண்டோர், மனக்கண் தொலைக்காட்சித் திறன் கொண்டோர், உளத்தால் இயக்கும் ஆற்றல் கொண்டோர், பிறரை வசியப்படுத்தும் ஆற்றல் கொண்டோர், பொருட்கள், நபர்கள் என்பவற்றை தொடுவதன்மூலம் அவை தொடர்பான தகவல்களை அறியும் ஆற்றல் கொண்டோர், செய்வினை, வசியம், பில்லிசூனியம் என்பவற்றை செய்யும் ஆற்றல் கொண்டோர் என்பவர்களது வீதமானது பூச்சியமாக (0) காணப்பட்டமை நேர்காணல் ஊடாக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்ததில் இருந்து கண்டறியப்பட்டது.




| இல | நேர்காணலை அடிப்படையாக கொண்டு | எண் |
|---|---|---|
| 01 | கடப்புநிலை உளவியல் சார்ந்து அமானுஸ்ய சக்திகளை நம்புவோர் | 94 |
| 02 | அமானுஸ்ய சக்திகள் தொடர்பான அனுபவங்களை கொண்டோர் | 36 |
| 03 | பேய், பூதம் ஆவிகள் என்பவற்றை நேரடியாக கண்டோர் | 09 |
| 04 | ஆவிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஊடகங்களாக செயற்பட்டோர் | 00 |
| 05 | மரணத்துடன் நெருங்கிய அனுபவங்களை கொண்டோர் | 02 |
| 06 | ஆவிகள், பேய்கள் தொடர்பாக சொந்த அனுபவத்தை கொண்டோர் | 09 |
| 06.1 | ஆவிகள், பேய்கள் தொடர்பாக பிறரிடமிருந்து கேட்டறிந்தோர் | 91 |
| 07 | எண்ணப்பரிமாற்ற (Telepathy) சக்தி கொண்டோர் (அனுப்புனர்) | 06 |
| 08 | எண்ணப்பரிமாற்ற (Telepathy) பெறுநர்களாக செயற்படுவோர் | 06 |
| 09 | தொலைவில் கேட்கும் திறன் கொண்டோர் | 00 |

| | | |
|---|---|---|
| 10 | ஒத்துணரும் ஆற்றல் கொண்டோர் | 07 |
| 11 | எதிர்காலத்தைக் கணிக்கும் ஆற்றல் கொண்டோர் | 13 |
| 12 | முக்காலத்தையும் கணிக்கும் ஆற்றல் கொண்டோர் (ஞானதிருஸ்டி) | 00 |
| 13 | நோய்களை குணமாக்கும் ஆற்றல் கொண்டோர் (Healing) | 00 |
| 14 | உளத்தால் இயக்கும் ஆற்றல் கொண்டோர் | 00 |
| 15 | பிறருடைய எண்ணங்களை அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையோர் | 07 |
| 16 | பிறரை வசியப்படுத்தும் ஆற்றல் உடையோர் | 00 |
| 17 | மனக்கண் தொலைக்காட்சி ஆற்றல் உடையோர் | 00 |
| 18 | பொருட்கள், நபர்களை தொடுவதன் மூலம் அவை தொடர்பாக அறிந்துகொள்ளும் ஆற்றல் கொண்டோர் | 00 |
| 19 | செய்வினை, வசியம், பில்லிசூனியம் என்பவற்றை நம்புவோர் | 95 |
| 20 | செய்வினை, வசியம், பில்லிசூனியம் என்பவற்றை செய்யும் ஆற்றல் கொண்டோர் | 00 |
| 21 | செய்வினை, வசியம், பில்லிசூனியம் என்பவற்றால் பாதிக்கப்பட்டோர் | 16 |
| 22 | அதீத சக்தி கொண்டோர் எனக் கருதி பணம் கொடுத்தோர் | 60 |
| 23 | அமானுஸ்ய சக்தி கொண்டோரை சந்தித்தோர் | 35 |
| 24 | குறிசொல்வோர், ஜோதிடம் பார்ப்போர், மந்திரவாதிகள் என்போருக்கு பணம் கொடுத்தோர் | 60 |
| 25 | குறிசொல்வோர், ஜோதிடம் பார்ப்போர், மந்திரவாதிகள் குறிப்பிட்டவை அவ்வாறே நடைபெற்றதாக குறிப்பிட்டோர் | 12 |
| 26 | கனவுகள் பலித்ததாக குறிப்பிட்டோர் | 20 |

**பரிந்துரைகள்**

1. கடப்புநிலை உளவியலின் பல்வேறுபட்ட அம்சங்களிளையும் உள்ளடக்கங்களையும் நிரூபிப்பதற்கு போதுமான விஞ்ஞானரீதியான கருவிகள் போதுமானளவு காணப்படவில்லை. உதாரணமாக நேர்காணல்கள், மாதிரிகளின் அனுபவங்கள் என்பவற்றை விஞ்ஞானரீதியாக நிரூபிக்க முடியவில்லை. எனவே புதிய கருவிகளும் ஆய்வு நுட்பங்களும் கடப்புநிலை உளவியலுக்கு தேவைப்படுகின்றன.

**2.** இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளில் கடப்புநிலை உளவியல்சார் ஆய்வுகளின் அளவானது மிகக் குறைவான அளவிலேயே காணப்படுகின்றது. கடப்புநிலை உளவியல் தொடர்பான ஆய்வுகளின் அதிகரிப்பானது அதன் உண்மைத்தன்மையினை நிரூபிக்கவும், புதிய கண்டுபிடிப்புக்களுக்கும், ஆய்வு முறைகளுக்கும் வலுச்சேர்க்கும். எனவே கடப்புநிலை உளவியல்ப் புலத்தில் தொடர் ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

3. கடப்புநிலை உளவியல் மிக நீண்டகாலமாக ஆராயும் விடயங்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமே ஆன்மீக வழிகளில் அணுகப்பட்டிருக்கின்றன. வெறுமனே விஞ்ஞான வழிகளையோ அல்லது வெறுமனே ஆன்மீக வழிகளையோ கைக்கொள்ளாது ஆன்மீக - விஞ்ஞான ஒருங்கிணைவின் ஊடாக கடப்புநிலை உளவியல் ஆய்வுசெய்யப்படுமெனில் புதிய கண்டுபிடிப்புக்களும், புதிய முடிவுகளும், கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

**REFERENCE**

Rhine Research Center, 2018, “What is parapsychology?”, 29.06.2018, https://www.rhine.org/what-we-do/parapsychology/what-is-parapsychology.html

Melton, J. G. (1996). Parapsychology. In Encyclopedia of Occultism & Parapsychology. Thomson Gale. ISBN 978-0-8103-9487-2

Harvey J. Irwin and Caroline Watt. An introduction to parapsychology McFarland, 2007, pp. 248-249

Sharma, 2016, “Telepathy”, 03.08.2018, http://3rdkan.blogspot.com/2016/01/telepathy-in-tamil.html

Radford, B, 2007, “Psychokinesis: Facts About Mind Over Matter” 03.08.2018, https://www.livescience.com/28119-telekinesis.html.

Wikipedia, 2018, “List of psychic abilities” 03.08.2018, https://en.wikipedia.org/ wiki/List_of _psychic _abilities

சீனிவாசன், வே, 2008, ‘‘யோகம்’’, கிழக்குப் பதிப்பகம், இந்தியா.

குருபாதம், எஸ், 2003, ‘‘மறுபிறப்பு தொடர்பான ஆச்சரியமான தகவல்கள்’’ முத்து பதிப்பகம், சென்னை, இந்தியா.